விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 250 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 09 சனிக்கிழமை (26.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கஜேந்திரகுமாரின் கொழும்பு வீட்டுக்கு முன்னால் பதற்றம்

### பொலிஸ், இராணுவம் குவிப்பு

(கொழும்பு)

பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு 15



சரத் வீரசேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## வடக்கு சட்டத்தரணிகள் கண்டனப் போராட்டம்



03

### நெற் கொள்வனவுக்கு

## 250 மில்லியன் மேலும் ஒதுக்கீடு

(கொழும்பு)

நெற்கொள்வனவிற்காக மேலும் 250 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளதாக நெற்கொள்வனவு சபை தெரிவித்துள்ளது.

11 மாவட்டங்களில் தற்போது நெற் கொள் 15

## நீர் மட்டம் குறைந்ததால்

### மின் உற்பத்திக்கு சிக்கல்

(கொழும்பு)

ஒக்ரோபர் மாத தொடக்கத்தில் போதிய மழை பெய்யாவிட்டால் மின் உற்பத்தி நெருக்கடிக்கு உள்ளாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வறட்சியின் காரணமாக நீர்த் தேக்கங்களின் நீர் 15

### தைரியமிருந்தால்

# பாராளுமன்றுக்கு வெளியில் வந்து கதையுங்கள்



## சரத் வீரசேகரவுக்கு சட்டத்தரணிகள் சவால்

(வவுனியா)

பாராளுமன்றுக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு சட்டத்தரணிகள் சவால் விடுத்துள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

### வெப்பமான வானிலை

## கண் தொடர்பான நோய் ஏற்படலாம்

(கொழும்பு)

வட மத்திய, கிழக்கு மாகாணங்களுக்கும் வவுனியா, முல்லைத்தீவு, மொனராகலை மாவட்டங்களுக்கும் அதிக வெப்பம் தொடர்பான எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் பாதிப்பை ஏற் 15

## வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவு

### சுவிஸ் தூதரகத்தின் முதல் நிலைச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான சுவிஸ் 15



### வறட்சியான வானிலையால்

## தெங்கு பூச்சிகளின் தாக்கம் அதிகரிக்கும்

(கொழும்பு)

வறட்சியினால் தெங்கு செய்கையில் பூச்சிகளின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என தெங்கு ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

வறட்சியினால் மேலும் பூச்சித் தாக்கங்கள் அதிகரிக்கலாம் என இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நயனி 15

## வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்களுக்கு இடமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநரின் செயலாளரான வாகீசன் மற்றும் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) குகநாதன் ஆகியோரின் பதவிகளை மாற்றுவதற்கு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

வட மாகாண ஆளுநரின் செயலாளராக இருந்த வாகீசனை மகளிர் விவகார அமைச்சுக்கும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளராக இருந்த ரூபினி வரதலிங் 15

### வவுனியாவில்

## நீர்த்தொட்டியில் விழுந்த குழந்தை பலி

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பகுதியில் நீர்த்தொட்டியில் விழுந்த இரண்டுவயதுபெண் குழந்தை ஒன்று மரணமடைந்துள்ளது.

இதில் நெளுக் 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து விடைபெறுகின்றார் கோபால் பாக்லே?



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே விரைவில் தமது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ளதாகவும் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகரை நியமிக்கும் ஆலோசனைகளில் இந்தியா ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன், கோபால் பாக்லேயை மீள நாட்டுக்கு அழைக்க இந்தியா ஆலோசித்துள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜாவை இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

டிசம்பர் மாதத்துடன், அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் சேவைக் காலம் நிறைவுக்கு வரவுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகராக கோபால் பாக்லேவை நியமிக்க இந்தியா உத்தேசித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுடன் இந்தியா நெருங்கிய உறவைக் கொண்டிருப்பதால், கோபால் பாக்லேயின் நியமனம் மேலும் இருநாட்டு உறவுகளை வலுப்படுத்தும் என இந்தியா கருதுகிறது.

இந்தியா-ஐரோப்பிய யூனியனின் விவகாரங்களை கையாண்டதில் சிறப்பு நிபுணத்துவம் மிக்கவராக சந்தோஷ் ஜா, திகழ்வதால் இலங்கையில் இந்திய மற்றும் சீன விவகாரங்களை சிறப்பாக கையாள்வார் என கருதப்படுகிறது. (ம-7)

# குருந்தூர்மலை அமைதியின்மைக்கு கத்தோலிக்கரே காரணமாம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

குருந்தூர் மலையில் தமிழர்கள் அமைதியாக பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டபோது, சிங்கள இனவாதிகள் ஏற்படுத்திய அமைதியின்மை பற்றி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் நேற்று பாராளுமன்றத்தில் புதுக்கதையொன்றை தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலை அமைதியின்மையின் பின்னணியில் கத்தோலிக்கர் ஒருவர் இருப்பதாக உள்ளூர் புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நாட்டில் ஏற்படக்கூடிய இன மற்றும் மத கலவரங்கள் குறித்து சர்வதேச புலனாய்வு சேவைகள் அரசாங்கத்திற்கு எவ்வித எச்சரிக்கையும் விடுக்கவில்லை என அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் தூண்டுதலுடன் நாட்டில் சில இடங்களில் இன மற்றும் மத கலவரத்தை ஏற்படுத்த சில குழுக்கள் முயற்சிப்பதாக உள்ளூர் புலனாய்வு சேவைகள் இனங்கண்டுள்ளதாகவும், அரசாங்கம், பாதுகாப்பு படையினர் மற்றும் புலனாய்வு பிரிவினர் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

முல்லைத்தீவில் வசிக்கும் கத்தோலிக்கர் ஒருவர் குருந்தூர்மலை சம்பவத்திற்கு விஷேட அக்கறை செலுத்தி அங்கு பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# இலங்கை விஜயம் செய்யவுள்ள நெதர்லாந்து பிரதிநிதிகள்

(கொழும்பு)

நெதர்லாந்து அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளது.

இதன்படி, நெதர்லாந்து கலாசார மற்றும் ஊடகத்துறை அரச செயலாளர் குணாய் உஸ்லு மற்றும் குழுவினர் நாளை 27ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

நெதர்லாந்தின் தூதரகத்தின்படி, அரச செயலாளர் குணாய் உஸ்லு இந்த வருட இறுதியில் இலங்கைக்கு திரும்பக் கொண்டுவரப்படும் கலாசார கலைப்பொருட்களின் உரிமையை மாற்றுவதற்கான சட்ட ஆவணத்தில் கையெழுத்திடுவதற்காக நாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

உரிமைக்கான சட்டபூர்வ மாற்றத்திற்கான ஆவணம், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் திங்கட்கிழமை (28) கையொப்பமிடப்படவுள்ளது.

இரண்டு தங்க வாள்கள் (சம்பிரதாய வாள்), கத்தி, வெள்ளி வாள் மற்றும் இரண்டு துப்பாக்கிகள் ஆகிய பொருட்கள் உள்ளடங்குவதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பாராளுமன்று...

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்து வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒருமணி நேர பணிப்புறக்கணிப்பும் ஆர்ப்பாட்டமும் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போதே வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

நிலுவையில் உள்ள குருந்தூர் மலை தொடர்பான வழக்கினை விசாரித்து வரும் நீதிபதியை பாதிக்கும் வகையிலான கருத்தினை பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அத்துடன் அவர் பாராளுமன்ற வரப் பிரசாதத்தை பயன்படுத்தியே இவ்வாறு கதைக்கிறார். முடிந்தால் அவர் வெளியில் வந்து இவ்வாறு கதைக்க வேண்டும்.

அவரது உரை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவருக்கு முகவுரையிடப்பட்டு, ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் நீதிச்சேவைகள் ஆணைக் குழு ஆகியவற்றிற்கு அதன் பிரதிகளை அனுப்ப இருக்கின்றோம். இந்த கடிதமானது வடக்கு கிழக்கில் அமைந்துள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கம் சார்பிலும் அனுப்பப்படவுள்ளது என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதியான சட்டவாட்சி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுக்காதே, அரசியல் வாதிகளே நீதிபதிகளை சுதந்திரமாக செயற்படவிடுங்கள், நீதிபதிக்கு மரியாதை குடுங்கள். நீதி துறையில் அரசியல் தலையீடு ஏன்போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். (ம-7)

## நீர்த்தொட்டி...

குளம் பகுதியை சேர்ந்த லிங்கராயா திவிங்கா என்ற இரண்டு வயதான குழந்தையே மரணமடைந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று மாலை வீட்டு முற்றத்தில் குறித்த குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. எனினும் சிறிது நேரத்தில் குழந்தையை காணாத நிலையில் பெற்றோர் குழந்தையை தேடியுள்ளனர்.

இதன்போது குறித்த குழந்தை கிணற்றிற்கு அருகாமையில் இருந்த நீர்த்தொட்டியில் வீழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டது. உடனடியாக மீட்கப்பட்ட குழந்தை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

எனினும் முன்னமே குழந்தை மரணமடைந்ததாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.104)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1947



மறைவு 25 . 08 . 2023

## கந்தசாமி இராமலிங்கம் (அப்புச்சி)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராமலிங்கம்(அப்புச்சி) அவர்கள் 25.08.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி - அன்னபூரணம் தம்பதிகளின் மூத்தமகனும் நுணாவிலைச் சேர்ந்த மயில்வாகனம் - தையல்நாயகி தம்பதிகளின் மூத்த மருமகனும் மனோகரிதேவியின் அன்புக் கணவரும் பவளவதனி(கனடா), ஜெயவதனி(கனடா), தர்மசீலன்(கனடா), மதிவதனி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன்(கனடா), சிவகுமார்(இந்தியா), அர்ச்சனா(கனடா), பாலச்சந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற நேதுகன்(கனடா), திசாலினி(கனடா), நிதுசா(கனடா), நிலக்ஷா(கனடா), விதுஷாந்(கனடா), விகேஷ்(கனடா), வர்ஷன்(கனடா), திஷாந்த்(பிரான்ஸ்), தியோணிக்கா(பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் சந்திரசேகரம்(கனடா), ஆனந்தராசா, சற்குணம், நடனசிவம், தவமலர் ஆகியோரின் சகோதரனும் நாகேஸ்(கனடா), செல்வராணி, நீலா, காலஞ்சென்ற தவலக்ஷிமி, புண்ணியமூர்த்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (27.08.2023) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

074 355 0930 (மகன்)
077 315 8597 (மனைவி)

(16848)

விற்பனைக்கு
குரும்பசிட்டியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
077 882 8638
(16847)

விற்பனைக்கு
- 275 அடி நீளம் 135 அடி அகலம் கொண்ட அமானுச சீட் கொண்ட தகரக் கொட்டகை விற்பனைக்குண்டு.
- 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட அஸ்பெஸ்டஸ் சீட்கொண்ட 2 Set கொட்டகை விற்பனைக்குண்டு.
077 882 8638
(16847)

கனடா சுற்றுலா விசா
சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
போலந்து நாட்டில் வேலைவாய்ப்புகள் உள்ளன.
தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
Hybrid International Hub(pvt) ltd Jaffna
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
021 222 1265, 076 250 0098
(C-7134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத்வீரசேகரவின் கருத்துக்கு எதிராக வடக்கு சட்டத்தரணிகள் போராட்டம்





**(யாழ்ப்பாணம்)**

**பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவின் கருத்தினைக் கண்டித்து வடக்கு மாகாண சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டனப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**

பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கடந்த 22 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும் நீதித் துறை சுதந்திரத்தை கேள்விக் குட்படுத்தும் வகையில் பாரா ளுமன்றில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து குறித்த அடை யாள கண்டனப் போராட்டமா னது இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் கௌரவ நீதிபதிகளின் கட மையில் தலையிடாதே, சுயா தீனமான நீதித்துறையின் செய ற்பாட்டை உறுதி செய்யுங்கள், நீதித்துறையின் சுதந்திரத் திற்கு களங்கத்தை ஏற்படு த்தாதே, பாராளுமன்ற சிறப் புரிமையை துஷ்பிரயோகம் செய்யாதே , கௌரவ நீதிபதிக ளின் கட்டளைகளுக்கு மதிப் பளி போன்ற பல்வேறு வாசக ங்கள் தாங்கிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(4-30,104,285,299,250,315)

# கிளிநொச்சி நகரை அண்மித்த ரயில் கடவையின் சமிக்ஞை சீரில்லை

## மக்கள் அச்சத்தில்



(முறிகண்டி)

கிளிநொச்சி நகரை அண் மித்த காளிகோவில் வீதியில் உள்ள புகையிரதக்கடவையின் சமிக்ஞை சீரின்றி வேலை செய்வதால் நாளாந்தம் அச்ச த்துடன் பயணி க்கவேண்டிஉள் ளதாக மக்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

குறித்த கட வையில் பல வேறு விபத்துக் கள் இடம்பெற்று ள்ளதாகவும் இறுதியாக இரா ணுவ வாகன விபத்தில் 7 உயிர்கள் காவு கொள்ளப்பட்ட தாகவும் மக்கள் தெரிவிக் கின்றனர். இந்த நிலையில், குறித்த புகையிரத கடவையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள னர். இதேவேளை, இலங்கை மத்திய வங்கி அலுவலகத்து க்குச் செல்லும் கடவையில் உள்ள சமிக்ஞை விளக்குகள் நீண்ட நாட்களாக ஒளிராத நிலையில் உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

எனவே விபத்துக்கள் ஊடாக இழப்புக்களை தடுக்க புகையிரத திணைக்கள அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-100)

# கசிப்புடன் கைதான இருவருக்கு தண்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் உட்பட்ட இரண்டாம் யூனிட் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பெண்களுக்கு 22,000 தண்டப் பணம் விதிக் கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரி யான் இரண்டாம் யூனிட் பகுதி யில் நான்கு போத்தல்கள் கசிப்பு மற்றும் இரண்டு போத்தல்கள் கசிப்பு என்பவற்றை உடை மையில் வைத்திருந்த இர ண்டு பெண்கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய் யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலை ப்படுத்தப்பட்டனர்.

அதன்போது நான்கு போத்தல்கள் கசிப்பினை உடை மையில் வைத்திருந்த பெண் ணுக்கு 12 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும்இரண்டு போத் தல்கள் கசிப்புடன் கைது செய்ய ப்பட்ட பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது. (நி-315)

# உவநீர் தடுப்பணையை புனரமைத்துத் தாருங்கள்

## கிளி.விவசாய அமைப்புக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி பகுதியில் உள்ள பண்டாரமிடுக்கு பகுதியில் சேதமடைந்துள்ள உவநீர் தடுப்பணையை புனரமை த்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கிராஞ்சி பண்டாரமிடு க்கு பகுதியில் சேதமடைந்து காணப்படுகின்ற உவர்நீர் தடுப்பணையானது ஏற்க னவே அமைக்கப்பட்டிரு க்கின்ற போதும் குறித்த உவர்நீர்த் தடுப்பணை சேதமடைந்துள்ளதாகவும் மழைக் காலங்களிலும் கடல்நீர் பெருக்கெடுக்கின்ற காலங்களிலும் விவசாய நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகும் நிலைமை காண ப்படுவதாகவும் உள்ளதால் தடுப்பணையை புனர மைப்புச் செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உவர்நீர் தடுப் பணை அமைக்கப்படாத விடத்து ஏற்கனவே விவ சாயம் செய்து வரும் பகுதிகளிலும் பாதிப்புகள் ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் குறித்த பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலம் விவசாயம் செய்யக் கூடியதாக இருப்பதாகவும் அவ்வாறான காணிகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் விவசாய அமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-315)

# மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது வெற்றிவிழா நிகழ்வுகள்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டையை போரிட்டு வெற்றி கொண்ட வன்னி யின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னி யனின் 220 ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவு கூரல் நேற்று முல்லைத்தீவு நகரில் உள்ள பண்டார வன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணி வித்து, நினை வுகூ ரல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன் னாள் பிரதேச சபை உறு ப்பினர் இ.ஜெகதீசன், தமி ழரசு கட்சியின் உறுப்பி னர்களான கி.சிவகுரு, இ.ஜெரோன்சன் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஆங்கிலே யரின் கோட்டையை 1803 ஆம் ஆண்டு போரிட்டு கைப்பற்றி, இரண்டு பீரங் கிகளையும் மாவீரன் பண் டார வன்னியன் கைப் பற்றிய நாளாக குறித்த தினம் அடையாளப்படுத்த ப்பட்டு ஒவ்வொரு வருடமும் நினை வேந்தல் இடம்பெறு கின்றமை குறிப்பிடத்த க்கது. (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் போராட்டம் வீண் பாகிஸ்தான் திரில் வெற்றி



பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் இலங்கையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றன. முதல் போட்டியில் பாகிஸ்தான் 142 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2வது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 300 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் குர்பாஸ் பொறுப்புடன் ஆடி சதமடித்தார்..

அவர் 151 ரன்கள் குவித்தார். இப்ராகிம் சட்ரன் 80 ரன்கள் எடுத்தார். முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 227 ரன்கள் குவித்தது.

இதையடுத்து, 301 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் இமாம் உல் ஹக் சிறப்பாக ஆடி அரை சதமடித்தார்.

அவர் 91 ரன்னில் அவுட்டானார். கப்டன் பாபர் அசாம் 53 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய ஷதாப் கான் 35 பந்தில் 48 ரன்கள் சேர்த்து வெளியேறினார். இறுதியில், பாகிஸ்தான் 49.5 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 302 ரன்கள் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. அத்துடன் ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றியது. கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய ஷதாப் கானுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. (4)

# ஆசிய கிண்ண கிரிக்கெட் பயிற்சியை ஆரம்பித்த இந்திய வீரர்கள்



ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 30முதல் செப்டம்பர் 17 வரை இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கும் ரோகித் ஷர்மா தலைமையிலான 18 பேர் கொண்ட இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. ஆசிய கிண்ண போட்டிக்கு சிறந்த முறையில் தயாராகுவதற்காக இந்திய வீரர்களுக்கு 6 நாள் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முகாம் பெங்களூர் அருகே உள்ள ஆலூரில் நேற்று முன்தினம் தொடங்கியது. கப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, காயத்தில் இருந்து மீண்டுள்ள ஸ்ரேயாஸ் அய்யர், லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்டியா உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றுள்ளனர்.

இந்த பயிற்சி முகாம் எதிர்வரும் 29 ஆம் திகதி நிறைவடைகிறது. மறுநாள் அங்கிருந்து வீரர்கள் கொழும்பு புறப்பட்டு செல்லவுள்ளனர்.

ஆசிய கிண்ண கிரிக்கெட்டில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை செப்டெம்பர் 2 ஆம் திகதி சந்திக்கிறது. (4)

# ஐ.சி.சி புதிய தரவரிசை முதலிடத்தில் பாபர் அசாம்



ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட் போட்டி வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை ஐ.சி.சிநேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் தொடர்ந்து பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாம் முதல் இடத்தில் உள்ளார்.

3 ஆவது இடத்தில் இருந்த ஃபகார் ஜமான் 2 இடங்கள் பின் தங்கி 5 ஆவது இடத்தை பிடித்தார். 5 ஆவது இடத்தில் இருந்த சுப்மன்கில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இதனை தொடர்ந்து 9 ஆவது இடத்தில் விராட் கோலியும் 11 ஆவது இடத்தில் ரோகித் சர்மாவும் நீடிக்கிறார். பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 10 ஆவது இடத்தில் நீடிக்கிறார். இருபது-20 ஐ பொறுத்த வரை பட்டிங் மற்றும் பந்து வீச்சாளர்கள் பட்டியலில் ஒரேஒரு இந்தியர் மட்டுமே டாப் 10 இல் இடம்பிடித்துள்ளார்.

பட்டிங்கில் சூர்யகுமார் யாதவ் நம்பர் 1 இடத்தில் நீடிக்கிறார். ஓல்ரவுண்டரில் ஹர்திக் பாண்ட்யா 2 ஆவது இடத்தில் நீடிக்கிறார். அயர்லாந்துக்கு எதிரான 2 ஆவது இருபது-20 போட்டியில் அரை சதம் விளாசியதன் மூலம் ருதுராஜ் கெய்க்வாட் 143 இடங்கள் முன்னேறி 87 ஆவது இடத்தை பிடித்துள்ளார். (4)

# நெய்மரால் மூன்று வீரர்களை வெளியேற்றும் அல் ஹிலால் அணி




பிரேசில் கால்பந்து நட்சத்திரம் நெய்மரை ஒப்பந்தம் செய்த நிலையில், தற்போது அல் ஹிலால் அணி நிர்வாகம் மூன்று வீரர்களை வெளியேற்ற முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அல் ஹிலால் அணி கடந்த சீசனில் தங்களது லீக் நிலையின் மூலம் கான்டினென்டல் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்த சீசனில் பல புது முகங்களை களத்தில் இறக்கவும் முடிவு செய்து பல புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்துள்ளது.

இதில், பிரேசில் கால்பந்து நட்சத்திரம் நெய்மர் அலெக்சாண்டர் மிட்ரோவிக், ரூபன் நெவஸ் மற்றும் மொராக்கோ கோல்கீப்பர் யாசின் பவுனோ ஆகிய பிரபலங்களை களமிறக்க உள்ளது.


இந்த நிலையில், ஒவ்வொரு அணியும் 8 வெளிநாட்டு வீரர்களை மட்டுமே தங்கள் அணியில் உட்படுத்த முடியும் என்பது விதியாக கூறப்படுகிறது. இதனால் தற்போது அல் ஹிலால் நிர்வாகமும் தங்களது அணியை ஒருங்கிணைக்க முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து பல வீரர்களை அல் ஹிலால் நிர்வாகம் வெளியேற்றி வருகிறது.

மட்டுமின்றி AFC சம்பியன்ஸ் லீக் விதியின்படி ஆசியாவிற்கு வெளியே பிறந்த ஐந்து வீரர்களை ஒப்பந்தம் செய்ய மட்டுமே அணிகள் அனுமதிக்கப்படுகின்றன.

ஆனால் அல் ஹிலால் அணியில் இந்த சீசனில் 7 பேர்கள் அந்தவகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். தற்போது அதில் மூவரை வெளியேற்ற முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (4)

# டோனியின் சாதனையை முறியடித்த ஆப்கான் வீரர்





பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் அணிகள் இடையிலான 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இலங்கையில் உள்ள ஹம்பன்டோட்டாவில் நேற்று முன்தினம் பகல்-இரவு மோதலாக நடைபெற்றது.

இதில் "டாஸ்" வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் பட் செய்தது. அதன்படி அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான விக்கெட் கீப்பர் ரமனுல்லா குர்பாசும் இப்ராகிம் ஜட்ரனும் வலுவான அஸ்திவாரம் ஏற்படுத்தி தந்தனர்.

அபாரமாக ஆடிய குர்பாஸ் தனது 5 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 227 ரன்கள் பெற்றனர். இப்ராகிம் ஜட்ரன் 80 ரன்னில் வெளியேறினார்.

ரமனுல்லா குர்பாஸ் 151 ரன்கள் விளாசியதோடு, பாகிஸ்தானுக்கு எதிராக அதிக ரன் குவித்த விக்கெட் கீப்பர் என்ற சாதனையையும் படைத்தார். இதற்கு முன்பு இந்திய விக்கெட் கீப்பர் டோனி 148 ரன் எடுத்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது.

இந்த போட்டியில் பாகிஸ்தான் அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதிய மழை பெய்யாவிட்டால் மின் உற்பத்தி நெருக்கடிக்குள்ளாகும்

(கொழும்பு)

**ஒக்டோபர் மாதத் தொடக்கத்தில் போதிய மழை பெய்யாவிட்டால் மின் உற்பத்தி நெருக்கடிக்கு உள்ளாகும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட இலங்கை மின்சார சபையின் தலைவர் ரொஹான் செனவிரத்ன, தற்போதைய வறட்சியின் காரணமாக நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் நீர் மின் உற்பத்தி திறன் தேசியத் தேவையில் 15 சதவீதமாக குறைந்துள்ளது என சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார தேவையில் 65 சதவீதத்திற்கு அனல் மின்சாரத்தையே சார்ந்துள்ளது. இதன் விளைவாக உற்பத்தி செலவு 800 மில்லியனில் இருந்து 1,200 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"கடந்த ஆண்டின் இதே காலத்தில், போதுமான அளவு மழை பெய்துள்ளது. நீர்த் தேக்கங்கள் நிரம்பின. சில சமயங்களில், 70 சதவீத தேவைக்கு நீர்மின்சாரத்தை நம்பியிருந்தோம். இன்று, 15 சதவீதமாக குறைந்துள்ளது" எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மீண்டும் பிளவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பதவிகளை அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் பெற்றுக் கொள்ளும் வியூகம் வகுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கட்சியின் செயலாளர் நாயகம் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவிகளைப் பெறுவதற்கு அக் குழுவினர் பலத்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆசியும் கிடைத்துள்ளதாக அறிய முடிகின்றது.

இந்த கவலையினால் தயாசிறி ஜயசேகர மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் கட்சியின் விவகாரங்களில் சற்று விரக்தியடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தயாசிறி ஜயசேகரவின் ஆசனத்தில் நடைபெற



விருந்த கட்சி மாநாடும் அரசாங்கத்தை ஆதரிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நலன் கருதி கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றன. (நி-5)

# மீன் பிடிக்கச் சென்றவர் யானை தாக்கி உயிரிழப்பு

(கொழும்பு)

கந்தகெட்டிய பகுதியில் யானை தாக்குதலுக்கு இலக்காகிய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நண்பர்களுடன் மீன் பிடிக்க சென்று வீடு திரும்பும் போதே அவர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்தவர் கந்தகெட்டிய பகுதியை சேர்ந்த 42 வயதுடையவராவார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)




## காத்தருள்வான் கந்தன்

நல்லை நகர் வீதியிலே
அடியவர்களை காத்து வரும்
ஆனைமுகன் தம்பியே
மயிலான வள்ளியை இடப்புறத்திலும்
குயிலான தெய்வானையை வலப்புறத்திலும்
அமர்ந்திருக்க
ஞான வேலுடன் காட்சி தரும்
உமையவளின் மைந்தனே
அழுது தொழுது வரும் அன்பர்களை
ஆற்றுப் படுத்தும்
அலங்காரக் கந்தனே
உன் பாதம் பணிகின்றோம்
நிம்மதியான வாழ்வு தருவாயா

க.செல்வமலர்,
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

## வருவான் முருகன்

நல்லை நகர் வீதியிலே
நலங்கள் யாவும் தருவதற்கு
புள்ளி மயில் மீது அமர்ந்திருந்து
அடியவர்களை காத்து வரும்
அலங்காரக் கந்தனே
சூரனை அழித்து தேவர்களை காத்திட்ட
சண்முகப் பெருமானே
குறைகளைத் தீர்த்து விடும்
குறத்தி மணாளனே
எங்களையும் காத்திட
முத்தமிழ் முருகனே வருவாயா

க.மலர்,
இடைக்காடு.

# இராசிபலன்

26.08.2023
ஆவணி 09, சனிக்கிழமை
தசமி முன்னிரவு 7.33 மணிவரை

மூலம் பின்னிரவு 3.57 மணிவரை
சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகுகாலம்-9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரோகிணி.

வளவன்




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.




சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.




சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், எண்ணங்கள் எளிதில் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.




வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன் வருவர், கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.




மற்றவர்களின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

எழுதப் படிக்கத் தெரிந்தவனுக்கு நான்கு கால்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் வெப்பம் நிலவுவதால்
# மதிய வேளைகளில் பயணங்களை தவிருங்கள்
## வைத்தியர் யமுனாநந்தா அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் தற்போது கடும் வெப்பம் நிலவி வருவதால் பொதுமக்கள் மதிய வேளைகளில் பயணங்கள் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித் துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக மதிய வேளையில் அதிக வெப்பம் காணப்படு கின்றது. குறிப்பாக 11 மணி யிலிருந்து 2 மணி வரையான காலப்பகுதியில் அதிகமான வெப்பநிலை காணப்படுகின் றது.

இந்த வெப்ப அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய நோய்கள் என்று கூறும்போது, நீரிழப்பு ஏற்படும். அதனை தடுப்பதற்கு போதிய ளவு நீர் ஆகாரம் அருந்த வேண்டும். 2-3 லீற்றர் நீரை சாதாரணமாக அருந்த வேண் டும் தற்போதுள்ள சூழ்நிலை யில் அதனை விட அதிகளவு நீரை அருந்த வேண்டும்.

அடுத்ததாக மதிய வேளை களில் பிரயாணங்களை தவிர் ப்பதனால் வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கலாம். குறிப்பாக மதிய நேரங்களில் விளையாட்டுகளில் ஈடுபடும் சிறுவர்கள் அதனை தவிர்ப்பது நல்லது. இந்த வெப்பநிலை அதிகரிப்பானது அடுத்த இர ண்டு கிழமைகளுக்கு நீடிக்க லாம். அதேவேளை போதிய ளவு நீர் உள்ள பழ வகைகளை உட்கொள்ள வேண்டும்.

காலை அல்லது மாலை வேளைகளில் நீராடுவதன் மூலம் உடல் வெப்பநிலை யினை குறைக்க முடியும். இத னால் வெப்பத்தால் ஏற்படக்கூடிய உடல் பாதிப்புகளையும் தவிர்க் கலாம்.

வெப்பமுள்ள சூழ்நிலையில் சில வேளைகளில் சுவாசத் தொற்று நோய் ஏற்படலாம். ஆகவே பொது இடங்களிற்கு செல்லும்போது அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக தூசுகள் இருக்கும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-104)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளஞ்கலைஞர் மன்ற த்தின் நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு நிகழ் வில் நாளை 27 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு கிழவன் காடு கலாமன்றத்தின் யாழ். கிளையினரின் குழு இசை நடைபெறவுள்ளது.

இதன்போது வயலின்-சு.நிரஞ்சலா, மிருதங்கம்-ப.விக்னேஸ்வரன், நெறியா ள்கை-ஹ.சித்திரா ஆகி யோரால் நிகழ்த்தப்படவுள் ளன.

அதனைத் தொடர்ந்து 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-வைஷாலி யோகராஜா, வய லின்-ச.திபாகரன், மிருதங்கம்-எஸ்.கமலதாஸ், கஞ்சிரா-ஞா.வசந் ஆகியோர் இசைக்க வுள்ளனர். (4-6)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவ ல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக் கூட்டம் இன்று மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்ட பத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திரு முன்னிலையில் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந் நிகழ்வில் கல்வி அமைச் சரின் முன்னாள் மேலதிக செயலாளர் கலாகீர்த்தி உடுவை. எஸ்.தில்லைநடராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார். (4-6)



யாழ்.போதனா வைத் தியசாலையில் நீரிழி வுச்சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக் காக 1000 நீரிழிவு கைநூல்கள் யாழ். நீரி ழிவு கழகத் தலைவர் தி.மைக்கலினால் வைத் தியர் ம.அரவிந்தனிடம் நேற்று முன்தினம் கைய ளிக்கப்பட்டன.

மரண விசாரணை அதிகாரிகள் சங்க

# யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக தவமலர்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும்-நிர்வாகத் தெரிவும் அண்மையில் அலரிமாளிகை யில் இடம்பெற்றது.

இதன்போது திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்க த்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக திருமதி சி.தவமலர் தெரிவு செய்யப்பட் டார்.

மேலும் 15 தொடக்கம் 25 வரு டங்கள் சேவையாற்றிய திடீர் மரண விசாரணை அதிகாரிக ளுக்கு நினைவுச் சின்னம் வழ ங்கிகௌரவிக்கப்பட்டது. (4-6-30)

# ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்துகள் கையளிப்பு




(அராலி)

வைத்தியர் வாணி பிறேம் ஜித் என்பவரின் நிதிப்பங்களிப்பு உதவியுடன், தொண்டு நிறு வனமாகிய வன்னி ஹோப் நிறு வனத்தினால் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்துகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை வைத் தியசாலை நிர்வாகத்தின ரின் வேண்டுகோளுக்கு இண ங்கவும் தற்போதைய நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டும் அவரது தனிப்பட்ட நிதியில் மருந்துகள் வைத்திய சாலைக்கு கையளிக்கப்பட்டன.

மருந்துகள் கையளிப்பு நிக ழ்வில் வன்னி ஹோப் நிறுவ னத்தினர், வைத்தியர்கள், தாதி யர்கள், வைத்தியசாலை ஊழி யர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-104)

# சிறுவர் பாதுகாப்பு வாரம்; கிளிநொச்சியில் பேரணிகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பல்வேறு இடர்களில் சிறுவர் உரிமை களை பாதுகாக்க கோரி விசேட விழிப்புணர்வு நடை பனி மற்றும் துவிச்சக்கர வண்டி பேரணி என்பன நேற்று நடைபெற்றுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு வார த்தை முன்னிட்டு சிறுவர் உரிமை களை பாதுகாப் போம் எனும் தொனிப்பொரு ளில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன.(4-6-315-316)

# வெளிவந்தது கலைமுகம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத் தால் வெளியிடப்படும் கலை முகம் சஞ்சிகைகளின் பவள இதழ் தற்போது வெளிவந் துள்ளது.

சிறுகதை, கட்டுரை, கவிதை போன்ற பல்வேறு பயனுள்ள விடயங்களுடன் வெளிவந்துள்ளது. (4-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நல்லைக்குமரன்' மலர் வெளியீடும் யாழ். விருது வழங்கலும்









(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் வருடந் தோறும் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீடு நேற்றுக் காலை நல்லை ஆதீன மண்டபத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சிரேஷ்ட அந்தணச்சிவாச்சாரியாரும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபருமாகிய வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்களுக்கு யாழ். விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (4)

## பச்சை குத்தியவர்களிடமிருந்து இரத்ததானம் பெறப்படமாட்டாது

### தேசிய இரத்தமாற்று சேவை பணிப்பாளர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

பச்சைகுத்தியவர்களிடம் இருந்து இனி இரத்த தானம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தேசிய இரத்த மாற்று சேவையின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஸ்மன் எதிரிசிங்க கூறியுள்ளார்.

இரத்த தானம் செய்பவரின் இரத்தம் கூறுகளாக பிரிக்கப்படுவதால், இரத்தம் பெறுபவர்களின் உயிருக்கு தேவையற்ற ஆபத்துக்களை ஏற்படுத்த வேண்டாம் என தேசிய இரத்த மாற்ற சேவை தீர்மானித்துள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கமைய, பச்சை குத்துதல், தோல் குத்துதல் போன்ற செயல்களைச் செய்பவர்கள், ஒரு வருடத்திற்கு இரத்த தானம் செய்பவர்களாகத் தொடர்பு கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பெரும்பாலான பச்சை குத்தும் மையங்கள் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை பின்பற்றாததால் ஆபத்து மேலும் தீவிரமடைவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்



(தருமபுரம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வணக்கஸ்தலங்களான தும்பணி விகாரை, திரேசம்மாள் தேவாலயம், ஆனந்தபுரம் கந்தசாமி கோவில், பாரதிபுரம் மெத்தடிக்ஸ் தேவாலயம், இல்லை மாதா நகர் சூசைபிள்ளை தேவாலயம் போன்ற இடங்களுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் இரணைமடு குளம் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-316)

## அம்பலப்பெருமாள் குளம் வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள்குளம் வீதியினை புனரமைப்பதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பலப் பெருமாள்குளம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் இக் கிராமத்தின் வீதி புனரமைக்கப்படும் என பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டு கிரவல் மண் வீதிக்கு அருகில் குவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வீதி வேலைகள் எதுவும் இடம் பெறாத நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணமாக இக் கிராமத்தில் வாழ்கின்ற 110 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

தமது வயல்களில் இருந்து நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில் கூட நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. அக்கராயன், மல்லாவி வைத்தியசாலைகளுக்கு அவசரமாக செல்ல வேண்டிய நிலையில் குன்றுங்குழியுமான வீதி நெருக்கடியாக காணப்படுகின்றது. எனவே வடமாகாண ஆளுநர் குறித்த வீதியினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-6-350)

## அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் வரை ரூ 20,000 கொடுப்பனவை வழங்குக

### அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கத்தின் செயலாளர் கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு மாதம் 20,000 கொடுப்பனவு வழங்குமாறு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கத்தின் செயலாளர் சந்தன சூரிய ஆராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

நான்கு பேர் கொண்ட குடும்பம் வாழ்வதற்கு மாதாந்தம் 76,000 ரூபாய் தேவைப்படுவதாக அரசாங்கப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 28,000 ரூபாவாக உள்ளது.

இதன் காரணமாக சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் வரை மாதாந்தம் 20,000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்கு அடுத்த வாரம் அரசாங்கத்திடம் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, அடிப்படைச் சம்பளம், ஆரம்பச் சம்பள கொடுப்பனவுகளை சேர்த்தாலும் 30,000 ரூபாய் மாதாந்தச் சம்பளம் பெறமுடியாது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக 15 லட்சம் பேரில் வாழ்வதற்கு போதிய மாதச் சம்பளம் இல்லாமல் 13 லட்சம் பேர் அரச சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக சில அரச உத்தியோகத்தர்கள் உணவிற்காக காய்கறிகள் மற்றும் சோறு மாத்திரமே வேலைக்கு கொண்டு செல்லும் பரிதாபகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் சம்பளம் அதிகரிக்கும் வரை உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் 2016 ஆம் ஆண்டு முதல் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வில்லை.

ஆனால் 2016 ஆம் ஆண்டிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் 300 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-)

## கோழி இறைச்சியின் விலை குறைகிறது

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவினால் குறைக்க இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய அமைச்[illegible]மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு விலையை குறைக்க நடவடிக்கை [illegible] யினர் தெரிவித்துள்ளனர். மேலும், டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் பட்சத்தில் வாடிக்கையாளர்களுக்கும் அதே அனுகூலத்தை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 187

### 43 வருட பாசப்போராட்டத்திற்கு பிறகு சந்தித்த சகோதரர்கள்

கோயம்புத்தூரில் 40 ஆண்டுகளுக்கு முன்பு தத்தெடுக்கப்பட்டு அமெரிக்காவில் சந்தித்த அக்கா- தம்பி ஆவணப் பதிவு. கோவையில் 1970 ஆம் ஆண்டு ப்ளு மௌண்டேன் என்கிற ஆதரவற்றோர் இல்லத்தை மேரி கேத்தரின் என்பவர் நடத்தி வந்துள்ளார். அங்கு விஜயா, ராஜ்குமார் என்கிற இரு குழந்தைகளை அவர்களது பெற்றோர் சேர்த்துள்ளனர். இவர்களின் தந்தை பெயர் அய்யாவு ,தாய் பெயர் சரஸ்வதி.

ஆனால் ராஜ்குமாரின் தற்போதைய பெயர் கேஸ்பர் ஆண்டர்சன். விஜயாவின் தற்போதைய பெயர் டயான் விஜயா கால். 1979 ஆம் ஆண்டு பிரிந்த, ராஜ்குமாரும், விஜயாவும் நாற்பத்தி மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் சந்தித்துள்ளனர். அப்போது இவர்களைப் பற்றிய ஆவணப்படம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

அதில் டயான் பேசுகையில், "எனக்கு மூணு வயசு இருந்தப்ப என் அம்மா ஆசிரமத்துல கொண்டுவந்து விட்டுவிட்டு, இங்கேயே இரு .உனக்கு சாப்பிட வாங்கிட்டு வரேன்னு சொல்லிட்டு போனாங்க. நான் போகாதீங்கனு அழுதேன். அதுதான் நான் என் அம்மாவை கடைசியா பார்த்தது ",என்றார்.

டயான் 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி கோவையிலிருந்து தத்தெடுக்கப்பட்டு, அமெரிக்கா .அழைத்துச் செல்லப்பட்டார். கேஸ்பர் அதே பெப்ரவரியில் 9ஆம் திகதி தத்தெடுக்கப்பட்டு, டென்மார்க் அழைத்துச் செல்லப்பட்டார்.

டயான் தனக்கு ஒரு தம்பி இருந்ததை நன்கு நினைவில் வைத்து உள்ளார் .ஆனால் கேஸ்பர் தத்தெடுக்கும்போது மிக இளவயது என்பதால் தனக்கு ஒரு அக்கா இருப்பது நினைவில் இல்லை.

"வெள்ளைக்கார நாட்டில் ஒரு வெள்ளைக்கார குடும்பத்தில் வளர்ந்த போதும், என் அம்மாவின் நினைவு என்னை விட்டு அகலவில்லை. இந்தியாவைப் பற்றிய நினைவு எனக்குள் இருந்துகொண்டே இருந்தது. ஆனால் என்னை தத்தெடுத்த குடும்பம் என்னை மிகவும் சிறப்பாக பார்த்துக் கொண்டார்கள்" என்கிறார் டயான்.

"ஐரோப்பாவில் தத்தெடுக்கப்பட்டாலும் நான் இந்தியாவை சேர்ந்தவன் என்பதை என் தோல் நிறமே அடையாளப் படுத்திவிடும். நான் தத்தெடுக்கப்பட்டது எனக்கு சின்ன வயசுல இருந்தே தெரியும். ஆனால் என் வேர்களைத்தேடி செல்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு அமைந்ததே இல்லை. 2015ஆம் வருடம்தான் முதல் முறையாக தமிழ் நாட்டுக்கு வந்தேன் .அதன் பிறகு 2019 இல் ஒரு தடவை வந்தேன். கோயம்புத்தூர் வந்து பார்த்தப்ப நான் தத்து எடுக்கப்பட்ட ஆசிரமம் வெகுநாட்களுக்கு முன்பே மூடப்பட்டு இருந்தது. .அதை பராமரித்து வந்தவங்க கிட்ட இருந்து எனக்கு சில போட்டோக்களை தவிர வேறு எதுவும் கிடைக்கல. அதனால நான் நம்பிக்கை இழந்து டென்மார்க் திரும்ப போயிட்டேன்.",என்கிறார் கேஸ்பர்.

அப்பதான் டிஎன்ஏ பரிசோதனை செய்து பார்க்கலாமே என்று, தன்னுடைய டிஎன்ஏ மாதிரிகளை பரிசோதனைக்கு கொடுத்திருக்கிறார் கேஸ்பர்.

சில மாதங்கள் கழித்து அமெரிக்காவின் உட்டா நகரிலிருந்து மேத்யூ என்ற ஒருத்தர் , கேஸ்பரைத் தொடர்பு கொண்டு, அவருடைய டிஎன்ஏ- , கேஸ்பரின் டிஎன்ஏ உடன் ஒத்துப் போவதாகக் கூறி உள்ளார்.

இதில் அதிசயம் என்னவென்றால், டயானுக்குத் திருமணமாகி, 5 குழந்தைகள்.அதில் மேத்யூ எனும் மகன் வேலை நிமித்தமாக கொஞ்சகாலம் இந்தியாவில் பெங்களூரில் இருந்துள்ளார்.தன் தாயின் உறவைத்தேடி, அவரும் டி.என்.ஏ.சோதனைக்குத் தந்துள்ளார்.

கொரோனா காலத்திற்குப் பின், மீண்டும் டி என் ஏ பரிசோதனைக்கு உட்பட்டு இருவரும் 100% உறவின் உண்மையை உணர்ந்துள்ளனர்.

"அப்பா அம்மாவைத்தேடிய தனக்கு அக்கா கிடைத்து இருப்பது வியப்பாக உள்ளது.அதைக் கேள்விப்பட்ட போது கிடைத்த உணர்வை விவரிக்க முடியாது.வியப்பிற்கும் அப்பாற்பட்டது" என்கிறார் கேஸ்பர்.

விதி வலியது என சொல்லப்படுவது உண்டு.சில சமயங்களில் விதி விசித்திரமானதும் கூட. நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கோவையில் பிரிந்த உடன்பிறப்புகள், கண்டங்கள் கடந்து அமெரிக்காவில் சந்தித்துக்கொள்ளும் அதிசயத்தை சாத்தியப்படுத்தி இருக்கிறது அறிவியல் வளர்ச்சி .தொழில்நுட்ப யுகத்தில் நிகழும் நேர்மறையான நிகழ்வுகளில் விஜயா ராஜ்குமாரின் கதை முக்கியமான இடம் வகிக்கும்.

# பிரிக்ஸ் அமைப்பில் ப

# வெற்றி பெற்றது பிரதமர்

(பிரிட்டோரியா)

**பிரதமர் மோடியின் கோரிக்கையை ஏற்று பிரிக்ஸ் அமைப்பில் மே நாடுகளை இணைக்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆர்ஜென எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் நாடுகள் முழுநேர உறுப்பினர்களாக இணையவுள்ளன.**

வளரும் நாடுகளின் அமைப்பான 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் தற்போது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய 5 நாடுகள் உள்ளன. 'பிரிக்ஸ்' அமைப்பின் உச்சி மாநாடு தென்னாபிரிக்கா தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது. இதில் பிரிக்ஸ் நாடுகளிடையே வர்த்தகம், கல்வி, தொழில்நுட்பம் போன்றவற்றில் ஒத்துழைப்பு மற்றும் புவி வெப்பமயமாதல், உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, " பிரிக்ஸ் அமைப்பில் தற்போது இந்தியா, ரஷ்யா, பிரேசில் உட்பட 5 நாடுகள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பில் மேலும் சில நாடுகள் இணைந்து பெரிய அளவிலான அமைப்பாக மாறவேண்டும். பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பு நாடுகளை அதிகரிப்பதற்கு இந்தியா தனது முழு ஆதரவை இங்கு தெரிவித்துக் கொள்கிறது. அதே தற்போது பிரிக்ஸ் உறுப் கருத்தொற்றுமையுட விரிவாக்கம் நடைபெற என்று வலியுறுத்தினார்

பிரதமர் மோடியின் கையை பிரிக்ஸ் சு ஆலோசித்து ஒருமன கொண்டது. அதன்படி புதிதாக 6 நாடுகள் இருக்கின்றன. இதை நிறைவுநாளான தினம் தென்னாபிரிக்க

## உலகக்கோப்பை 'செஸ்' போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார் பிரக்ஞானந்தா



(டில்லி)

உலகக்கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழக வீரர் பிரக்ஞானந்தாவுக்கு பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அஜர்பைஜானில் நடந்த உலகக்கிண்ண செஸ் போட்டியில் போராடி தமிழக வீரர் பிரக்ஞானந்தா 67 இலட்சம் பரிசு, வெள்ளிப் பதக்கத்தினை பெற்றிருந்தார்.

இந்நிலையில், வெள்ளிப்பதக்கம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடி உட்பட பலரும் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இதன்போது இந்தியா பிரக்ஞானந்தாவினால் பெருமைப்படுகின்றது என இந்திய பிரதமர் நரேந்திரமோடி பாராட்டியுள்ளதுடன், உங்கள் சாதனை 140 கோடி இந்தியர்களின் கனவை பிரதிபலிப்பதாகவும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹர்திக் பாண்ட்யா தனது பதிவில், "ஒட்டுமொத்த நாட்டிற்கும் நீங்கள் பெருமை சேர்த்திருக்கிறீர்கள் பிரக்ஞானந்தா! உங்களின் கதை மிகவும் ஊக்கமளிக்கிறது. உங்களுக்காக அனைத்தையும் வைத்துக் கொண்டு எதிர் காலம் காத்திருப்பதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்" எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

## எல 40

(டில்லி

ஆந்த வாடாவி வாகன ஏற்பட்ட வாகனா



எரிந்து குறித் யத்தில் க்ரீக்மோ தளத்தில் சைக்கிள் ப்பட்டிருந் மேலு

## அந்தாட்டிக்காவில் உருகும் பனிக்கட்டி; 10,000 பெங்குயின்கள் உயிரிழப்பு!

அந்தாட்டிக்காவில் 10 ஆயிரம் பெங்குயின்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பனி கட்டி உருகிவருவதன் காரணமாக கடலில் நீந்தும் போது உறைந்து உயிரிழந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த 2022 இன் பிற் பகுதியில்,

அந்தாட் உள்ள கடலுக்கு ததாக அ காட்டியு


இந்த கைக்கே செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ம் புதிதாக 6 நாடுகள்
# மர் மோடியின் கோரிக்கை

பில் மேலும் 6
ஆர்ஜெண்டீனா,
அமீரகம் ஆகிய




. அதேநேரத்தில்
க்ஸ் உறுப்பு நாடுகளின்
றுமையுடன் இந்த
நடைபெற வேண்டும்"
றுத்தினார்.
மோடியின் கோரிக்
ரிக்ஸ் கூட்டமைப்பு
ஒருமனதாக ஏற்றுக்
அதன்படி, பிரிக்ஸில்
நாடுகள் இணைய
ன. இதை மாநாட்டின்
ரான நேற்று முன்
னாபிரிக்க ஜனாதிபதி

சிரில் ராமபோசா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "பிரிக்ஸ் அமைப்பில் மேலும் 6 நாடுகளை இணைக்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆர்ஜெண்டீனா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளை பிரிக்ஸ் அமைப்பின் முழுநேர உறுப்பினர்களாக சேர்க்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவு 2024ஆம் ஆண்டு ஜனவரி முதல் அமுலுக்கு வரும். அடுத்த ஆண்டு இந்த 6 நாடுகளும் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணையும்" என தெரிவித்துள்ளார். (நி-5)

## வடகொரியா
# ஏவிய செயற்கைக்கோள் மீண்டும் தோல்வி

(பியாங்யாங்)

வடகொரியா, கடந்த மே மாதம் இராணுவ உளவு செயற்கைகோளை விண்ணில் ஏவியது. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. செயற்கைகோளை சுமந்து சென்ற ரொக்கெட் வெடித்து கடலில் விழுந்தது.இந் நிலையில் இம் மாதம் 30 ஆம் திகதிக்குள் மீண்டும் ஏவுவதற்கு திட்டமிட்டு நேற்று முன்தினம் 2 ஆவது முறையாக இராணுவ உளவு செயற்கைக் கோளை வடகொரியா ஏவியது. ஆனால் அதுவும் தோல்வி அடைந்தது. வடகொரியாவின் தேசிய விண்வெளி மேம்பாட்டு நிர்வாகம் நேற்று முன்தினம் அதிகாலை மல்லி ஜியாங்-1 என்ற புதிய வகை ரொக்கெட்டில் சோஹே செயற்கைகோளை விண்ணில் ஏவியது. ரொக்கெட்டின் முதல் மற்றும் 2 ஆம் நிலைகளின் விமானங்கள் இயல்பாக செயற்பட்டன. ஆனால் 3 ஆம் கட்டத்தில் அவசர வெடிப்பு அமைப்பில் ஏற்பட்ட தவறு காரணமாக ஏவுதல் தோல்வி அடைந்தது என்று வடகொரியா தெரிவித்தது. மேலும், இந்த தகவலுக்கான காரணம் ஒரு பெரிய பிரச்சினை இல்லை என்றும் சிக்கலை ஆராய்ந்து அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு. அக்டோபர் மாதம் மீண்டும் செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (நி-5)

# அட்லாண்டாவில் சரணடைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

ஜோர்ஜியாவில் 2020 தேர்தலை சட்டவிரோதமாக மாற்றியமைக்க திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் அட்லாண்டா சிறையில் சரணடைந்தார்.



20 நிமிடங்கள் சிறையில் இருந்த அவர் $200,000 பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணையின் போது ட்ரம்பிற்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இருந்ததால் அவர் கைது செய்யப்படலாம் என்று கருதப்பட்டது. வழக்கு விசாரணை முடிவுற்ற நிலையில், அவருக்கு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து ட்ரம்ப் அட்லாண்டா சிறையில் சரணடைந்தார். ட்ரம்ப் உட்பட 18 பேருக்கு எதிராக தேர்தல் முறைகேடு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.(நி-5)

# எலக்ரிக் மோ.சைக்கிள் வெடித்ததில் 400 மோ.சைக்கிள்கள் தீக்கிரை

(டில்லி)

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் தனியார் இரு சக்கர வாகன விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 400 வாகனங்கள் தீக்கிரையாகி



எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த விற்பனை நிலையத்தில் முதல் தளத்தில் எலக்ட்ரீக்மோட்டார்சைக்கிள்களும்கீழ் தளத்தில் பெற்றோல் மோட்டார் சைக்கிள்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மேலும் அதேவளாகத்தில் வாகனங்கள் பழுது நீக்கும் சர்வீஸ் சென்டரும் இயங்கி வந்தது. நேற்று முன்தினம் இரவு ஊழியர்கள் முதல் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த ஒரு எலக்ட்ரீக் மோட்டார் சைக்கிள்களுக்கு சார்ஜ் போட்டு விட்டு அதை நிறுத்தாமல் போய் விட்டதாக கூறப்படுகிறது.

எலக்ட்ரீக் மோட்டார் சைக்கிளுக்கு நீண்ட நேரம் சார்ஜ் ஏறியதால், நேற்று அதிகாலை எலக்ட்ரானிக் மோட்டார் சைக்கிள் திடீரென வெடித்து சிதறியது. இதன் காரணமாக, அருகில் உள்ள மோட்டார் சைக்கிள்களுக்கும் தீ பரவியது. அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த காவலாளிகள் இது குறித்து பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தீயணைப்புத் துறையினர் வருவதற்குள் தீயானது முதல் தளத்திலிருந்து கீழ்தளத்திற்கு பரவி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மோட்டார் சைக்கிள்கள் மீதும் பற்றியது. தீயணைப்புத் துறையினர், சம்பவ இடத்திற்கு வந்து நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

எனினும் தீ வேகமாக பரவியதில், பல கோடி ரூபாய் மதிப்பிலான வாகனங்கள் எரிந்து சேதம் அடைந்தன. இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (நி-5)

# நேபாளத்தில் பாரிய பேருந்து விபத்து 7 பேர் உயிரிழப்பு; 19 பேர் படுகாயம்



(காத்மண்டு)

நேபாளத்தில் பாரா மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.மேலும் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


காத்மண்டுவில் இருந்து ஜனக்பூருக்கு 27 பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று, பாராவில் உள்ள சூரியாமை பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

இதனால், உயிரிழப்பின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (நி-5)

அந்தாட்டிக்காவின் மேற்கில் உள்ள பெல்லிங்ஷவுசென் கடலுக்கு முன்னால் நிகழ்ந்ததாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தத் தரவுகள் செயற்கைக்கோள் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.



90 வீதத்திற்கும் அதிக மானவர்கள். இந்த நூற்றாண்டின் இறுதியில் கால் வீதத்திற்கும் அதிகமான பென்குயின்கள் இறந்து விடும் அபாயம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசி பாவனையால் மனநோயாளியாகும் குழந்தைகள்

## மருத்துவர் எச்சரிக்கை



(கொழும்பு)

**கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைகளுக்கு ஞாபகமறதி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக மருத்துவர் ரூமி ரூபன் தெரிவிக்கின்றார்.**

குழந்தைகள் வெகுவாக இணையக் காணொளி போட்டி விளையாட்டுகளுக்கு அடிமையாகின்றனர்.


இணையக் காணொளி விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் தீவிரமாக அவதானம் செலுத்துவதால் மனநல நோய்க்கு உள்ளாகின்றனர்.

இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்குகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும்.

ஆகையினால் குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்கு வதை பெற்றோர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மருத்துவர் ரூமி ரூபன் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)

## சந்திரயானின் வெற்றியை கொண்டாடிய ‘கூகுள்’




(வோஷிங்டன்)

இந்தியாவின் 'சந்திரயான்-3' விண்கலம், நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இந்நிலையில் இச்சாதனையைக் கொண்டாடும் விதமாக உலகின் முன்னணி தேடுபொறியான 'கூகுள்' டூடுல் எனப்படும் சிறப்பு கவன ஈர்ப்புச் சித்திரமொன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன் குறித்த 'டூடுல்' பக்கத்தில் 'சந்திரயான் -3' திட்டத்தின் முழு பின்னணித் தகவலையும் இணைத்துள்ளது.

கூகுள் தேடு பொறியானது பிரபல ஆளுமைகளின் பிறந்த நாள், பண்டிகை நாட்கள், மற்றும் முக்கிய தினங்களின் போது சிறப்பு டூடுலை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பட்டதாரிகளுக்கு இரு வாரங்களில் ஆசிரியர் நியமனம்

### கல்வி அமைச்சர் சுசில் தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர் தொழிலை விட்டு சென்றவர்களுக்கு பதிலாக பட்டதாரிகளையும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான அதிகாரத்தை விரைவில் மாகாண சபைகளுக்கு வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டிலுள்ள ஆரம்பநிலை கல்வி முற்றிலும் வீழ்ச்சியடைவதற்கு காரணம் கொவிட் மட்டுமல்ல பயிற்சியற்ற ஆசிரியர்களை ஆரம்பப் பிரிவிற்கு உட்படுத்தியமையே பிரதான காரணம்.

இவ்வாறு பயிற்சியற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கி பரீட்சை நடத்தி உரிய பிரிவுகளுக்கு நியமிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையை ஒரு பிரிவினர் நீதிமன்றத்திற்கு சென்று தடை செய்தார்கள்.

பாடசாலை மாணவர்களின் விடயத்தில் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும். இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு இது நில வழக்கு அல்ல.

அனைவரும் நீதி கோரி நீதிமன்றத்திற்கு செல்கின்றார்கள். ஆனால் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து யாரும் கேள்வி கேட்பதில்லை.

அதிபர்களை நியமிக்க முடியாது. மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பணியமர்த்த மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

ஆசிரியர் தொழிலை விட்டு சென்றவர்களுக்கு பதிலாக பட்டதாரிகளையும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான அதிகாரத்தை எதிர்வரும் 2 வாரங்களில் மாகாண சபைகளுக்கு வழங்குவேன்.

அதற்கான அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்க தீர்மானித்துள்ளேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சந்திரனின் வாசலைத் தொட்ட இந்தியா தொல்பொருளைத் தேடும் இலங்கை

### அரசை விளாசித் தள்ளிய மனோ எம்.பி

(கொழும்பு)

வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலைப் பாரதம் தொடும் போது நாம் இங்கு தரைக்குக் கீழே தொல்பொருளைத் தேடுகின்றோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி இலங்கை அரசை விளாசித் தள்ளியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும் நிலவின் தென்முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும் அரசுக்கும் குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் வேலைத்திட்டப் பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழில்நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்தச் சாதனையை எண்ணி தென்னாசிய நாட்டவராகவும் இந்திய வம்சாவளி தமிழராகவும் பெருமையடைகின்றேன். ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலைப் பாரதம் தொடும் போது, நாம் இங்கு தரைக்குக் கீழே தொல்பொருளைத் தேடுகின்றோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகின்றேன்.

பாரதம் தந்த 13 பிளஸ் மாகாண சபையும் இன்று குருந்தூர் மலையில் ஏறி விழுந்து நிற்கின்றது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறிப்படுகின்றது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்குப் பதிலாக எல்லாப் பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப் போன நாட்டவராக நாம் இன்று இருக்கின்றோம்.

தொல்பொருள் அகழாய்வு பிரதேசம், மதங்களுக்கும் மத நிகழ்வுகளுக்கும் இடம் தராத பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அது தொடர்பான எல்லா வரலாறு உண்மைகளையும் ஆவணப்படுத்தி ஆர்வலர்களுக்கு எடுத்துக் கூறும் அரச நிறுவனமாக இருக்க வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையறிவு எமக்கு இல்லை.

ஆகவே, ஒருநாள் மாலைதீவும் இப்படி "மூன் - ரொக்கட்" அனுப்பும் வரை நாம் இப்படி தொல்பொருளாராட்சியில் தேடி மோதிக்கொண்டே இருப்போம் என அவர் தெரிவித்தார். (நி-5)

## போரைத் தூண்டும் செயல்களை அரசு உடனே நிறுத்த வேண்டும்

### அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து



(கொழும்பு)

இனவாதத்தைத் தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், குருந்தூர் மலை பௌத்த மரபுரிமைகளைக் கொண்டுள்ளது. மகாவம்சம் உட்பட பௌத்த வரலாற்று நூல்களில் குருந்தூர் மலை குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1933 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குருந்தூர் மலையில் 78 ஏக்கர் நிலப்பரப்பு தொல்பொருள் மரபுரிமை என்று வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.

தமிழர்களுக்கு சட்ட அந்தஸ்துடன் காணிகளை வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை. வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், தொல்பொருள் மரபுரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி பிரச்சினைக்கு காணி ஆணைக் குழு ஊடாக தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தைத் தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரது பொறுப்பாகும் எனத் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சிக் காலநிலையால் காட்டுத்தீ அதிகரிப்பு

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் வறட்சியான காலநிலையினால் காட்டுத்தீ அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டுத்தீ அதிகரிப்பு மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்விடயம் தெரிய வந்துள்ளது.


தற்போது நிலவுகின்ற வறட்சியான காலநிலை காரணமாக தோட்டங்களில் அதிகளவான தீப்பரவல்கள் பதிவாகியுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பதிவாகிய 78 காட்டுத்தீயுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் அதிகளவாக 123 காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிலவும் வறண்ட காலநிலையுடன், கவனக்குறைவான மனித நடவடிக்கைகளினால் காட்டுத்தீ சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் முகாமிடும் குழுக்கள் காரணமாகவும் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே இவ்வாறான காடுகள் அழிக்கப்படுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதில் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# வீதியோர மரக்கன்றுகள் தீயில் கருகும் நிலையில்



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏ-9 வீதியோரம் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற நிழல் மரக்கன்றுகள் தீயில் எரிந்து கருகும் நிலையில் காணப்படுவதாக சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் புகையிரத திணைக்கள ஊழியர்கள் வீதி மற்றும் தண்டவாள ஓரங்களை துப்புரவு செய்த பின்னர் குப்பைகளை வீதியோரம் போட்டு எரிக்கின்றனர்.

தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் வீதியோரம் காய்ந்து காணப்படும் புற்கள் வழியாக தீ பரவுவதால் வீதியோரம் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிழல் மரக்கன்றுகள் எரிந்து நாசமாகின்றன.

தன்னார்வ நிறுவனங்கள், இளைஞர் அமைப்புக்கள் பசுமையை ஏற்படுத்தும் நோக்கில் வீதியோரம் நிழல் மரங்களை நாட்டி பராமரித்து வரும் நிலையில், குறித்த திணைக்கள ஊழியர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் நிழல் மரங்களை பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (நி-30)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| தக்காளி | 200 | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 250 |
| கரட் | 350 | 450 | 450 | 480 |
| பூசணி | 80 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 220 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 250 | 150 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 240 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 350 | 300 |
| போஞ்சி | 350 | 500 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 160 | 160 |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 450 | 400 | 600 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 100 | 120 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2897

**அபி**

எல மாப்ள நாம பூமில இருக்கோமா



இல்ல சூரியனுக்கு பக்கத்துல போயிட்டோமா இப்படி போட்டு வெயில் கொளுத்துது.

**காவியா**

காத்தடிச்சா இப்படி வேர்க்குதே

என்னய்யா சொல்றே காத்தடிச்சா எப்படி வேர்க்கும்



நான் சைக்கிளுக்கு காத்தடிச்சன்

**சுபர்ணா**

மனைவி- உப்புமா நல்லா இருக்கா



கணவன்- நல்லா இருக்குன்னு சொன்னா இரண்டு கரண்டி எக்ஸ்டா அள்ளி வைப்பா. நல்லா இல்லைன்னு சொன்னா அதே கரண்டில இரண்டு வைப்பா

**விஷ்வா**

டிவி- என்னைக் கூட கொஞ்சம் நேரம் விட்டுடுவாங்க. ஆனால் நீ ரொம்ப பாவம்டா உன்னை விடவே மாட்டேங்குறாங்க




**பிரசாத்**

எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும் பேய்க்கு யார்னே துணி துவச்சு குடுக்குறது வெள்ள வெள்ளேர்ன்னு இருக்கு



ஏன்டா இப்படியெல்லாம் பேசுற உனக்கு யார்றா சொல்லித் தாரது

**ஆகாஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 266





மிதந்து சென்று புதை சேற்றுக் குழியின் அக்கரையையும் அடைந்துவிட்டது. பூங்குழலி கெட்டித்தரையில் குதித்தாள். கரையில் கால்களை நன்றாய் ஊன்றிக் கொண்டு வந்தியத்தேவனுடைய கைகளைப் பற்றிக் கரையில் இழுத்து விட்டாள். அம்மம்மா! அந்த மெல்லியலாளின் கைகளிலே தான் எவ்வளவு வலிமை! தஞ்சை புரிக்கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையருடைய இரும்புக் கைகளை விட இவளுடைய கரங்கள் அதிக உறுதியாயிருக்கின்றனவே.

கரை ஏறியதும் வந்தியத்தேவன் கலகலவென்று சிரித்தான். அவனுடைய கால்கள் மட்டும் கொஞ்சம் நடுங்கிக் கொண்டிருந்தன.

"என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டதாக உனக்கு எண்ணம் போலிருக்கிறது. நீ வந்திராவிட்டால் நான் கரையேறி இருக்க மாட்டேன் என்று நினைத்தாயோ?" என்றான்.

"பின் எதற்காக அப்படி 'ஐயோ! ஐயோ!' என்று கத்தினாய்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"உன்னை ஓடாமல் தடுத்து நிறுத்துவதற்காகத்தான்"

"அப்படியானால் மறுபடியும் உன்னைக் குழியிலேயே தள்ளி விடுகிறேன். உன் சாமர்த்தியத்தினால் நீயே கரை ஏறிக்கொள்" என்று பூங்குழலி சொல்லித் தள்ள எத்தனித்தாள்.

"ஐயையோ!" என்று வந்தியத்தேவன் விலகி நின்று கொண்டான்.

"எதற்காக அலறுகிறாய்?"

"உயிருக்காகப் பயப்படவில்லை. சேற்றுக்குத்தான் பயப்படுகிறேன். ஏற்கெனவே தொடை வரைக்கும் சேறாகி விட்டது"

பூங்குழலியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. வந்தியத்தேவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அதோ கடல் இருக்கிறது. போய் சேற்றை அலம்பிச் சுத்தம் செய்து கொள்" என்றாள்.

"நீ கொஞ்சம் முன்னால் சென்று வழிகாட்ட வேண்டும்" என்றான் வந்தியத்தேவன். இருவரும் கடற்கரையை நோக்கி நடந்தார்கள். சேற்றுப் பள்ளத்தைச் சுற்றிக் கொண்டு சென்றார்கள்.

"என்னைக் கண்டதும் எதற்காக அப்படி விழுந்தடித்து ஓடினாய்? என்னைப் பயங்கரப் பேய் பிசாசு என்று எண்ணி விட்டாயா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"இல்லை பேய்பிசாசு என்று எண்ணவில்லை. ஆந்தை என்று எண்ணினேன். உன் மூஞ்சி ஆந்தை மூஞ்சி மாதிரியே இருக்கிறது" என்று கூறி விட்டுச் சிரித்தாள்.

வந்தியத்தேவனுக்குத் தன் தோற்றத்தைக் குறித்துக் கர்வம் அதிகம். ஆகையால் அவனை ஆந்தை மூஞ்சி என்று சொன்னது அவனுக்கு மிக்க கோபத்தை உண்டாக்கிற்று.

"உன்னுடைய குரங்கு முகத்துக்கு என்னுடைய ஆந்தை முகம் குறைந்து போய்விட்டதாக்கும்" என்று முணுமுணுத்தான்.

"என்ன சொன்னாய்?"

"ஒன்றுமில்லை. என்னைக் கண்டு எதற்காக அப்படி ஓடினாய் என்று கேட்டேன்."

"நீ எதற்காக அப்படி என்னைத் துரத்திக் கொண்டு வந்தாய்?"

"கலங்கரை விளக்கத்துக்கு வழி கேட்பதற்காக உன்னைத் துரத்திக் கொண்டு வந்தேன்."

"அதோ தெரிகிறதே விளக்கு! என்னை வழி கேட்பானேன்?"

"காட்டுக்குள் புகுந்த பிறகு தெரியவில்லை. அதனாலேதான். நீ எதற்காக என்னைக் கண்டதும் அப்படி ஓட்டம் எடுத்தாய்?"

"ஆண் பிள்ளைகள் மிகப் பொல்லாதவர்கள். ஆண் பிள்ளைகளைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை"

"சேந்தன் அமுதனைக் கூடவா?" என்றான் வல்லவரையன் கொஞ்சம் மெல்லிய குரலில்.

"யாரைச் சொன்னாய்?"

"தஞ்சாவூர் சேந்தன் அமுதனைச் சொன்னேன்."

"அவனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"அவன் உன் அருமைக் காதலன் என்று தெரியும்."

"என்ன? என்ன?"

"உன் பெயர் பூங்குழலி தானே?"

"என் பெயர் பூங்குழலிதான். சேந்தன் அமுதனைப் பற்றி என்ன சொன்னாய்? அவன் என்"

"அவன் உன் காதலன் என்றேன்."

பூங்குழலி கலீர் என்று நகைத்தாள். "அப்படி யார் உனக்குச் சொன்னது?" என்றாள்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## பத்தாவது பாஸ்



நாதஸ்வரம் மற்றும் மேளதாளத்துடன் பாண்டித்தேவரும் அந்த கிராமத்து மக்களும் மந்தை வெளியில் காலை பஸ்ஸுக்காக காத்துக் கிடந்தனர்.

மதுரையிலிருந்து வரும் பஸ் அங்குதான் வந்து நிற்கும். அதில்தான் பத்தாவது பாஸ் ஆன பாண்டித்தேவரின் மகன் ரகு வருவான்.

அந்த கிராமத்தில் ரகு ஒருவன் தான் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான். அவன் படித்து அந்த கிராமத்தை முன்னுக்குக் கொண்டு வருவான் என்று எல்லோருமே நம்பினர். பஸ் வந்து நின்றது.

பஸ்ஸிலிருந்து ரகு இறங்கினான். அடுத்த விநாடி நாதஸ்வரமும் மேளதாளமும் முழங்கியது. பாண்டித்தேவர் தன் கையில் இருந்த மாலையை அவன் கழுத்தில் போட்டார்.

ரகுவை எல்லோரும் தெருக்களில் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

ரகுவின் அம்மா பேச்சியம்மா வீட்டு வாசலில் ஆரத்தி எடுத்தாள்.

தான் பரீட்சையில் தேறவில்லை என்பதை எப்படிச் சொல்வது?

"பாஸ் பண்ணிட்டியாப்பா" என்றாள் அம்மா

"ஆமாம்மா பாஸாயிட்டேன்" ஒரே ஒரு பொய்தானே என்று சமாதானப் படுத்திக் கொண்டான்.

ஆனால் அடுத்தடுத்து ஊரில் கேட்கும் எல்லோருக்கும் அதே பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியிருந்தது.

"என்னா தம்பி மேல படிக்கப் போறீயா?"

"ஆமாம்"

"டாக்டருக்குப் படிக்கப் போறியாமே"

"ஆமாம்"

"இப்போ எப்படி மதுரையிலேயே படிக்கலாமா. இல்லை மெட்ராசுக்குப் போவணுமா?"

இப்படி ஆளுக்கு ஆள் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டனர்

இவனும் ஓயாமல் பொய் சொன்னான்.

"ஒரு பொய்யை மறைக்க ஓராயிரம் பொய் சொல்ல வேண்டி வரும்" என்று தன் ஆசிரியர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

அடுத்த நாள் ரகுவின் அப்பாவும் அம்மாவும் இவனை பக்கத்து ஊர் கோவிலுக்குக் கூட்டிச் சென்று மொட்டை அடித்துக் கொண்டு வந்தனர்.

ரகு பத்தாவது பாஸ் செய்தால் மொட்டை போடுவதாக பிரார்த்தனையாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.நடுநிலைமையே நீதியின் உயிர்.

– ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சரத் வீரசேகரவின் பதவி வெறிதாக்கப்பட வேண்டும்

நீதிமன்றத்தை – நீதிபதியை அவமதிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை நீதிபரிபாலனத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

ஜனநாயகத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்று நீதித்துறை. மற்றையது சட்டத்தை உருவாக்குகின்ற பாராளுமன்றம்.

ஆனால் ஜனநாயகத்தைத் தாங்குகின்ற நான்கு தூண்களில் ஒன்றாகிய பாராளுமன்றத்தில் வைத்து நீதித்துறையை விமர்சிப்பதாயின், இந்த நாட்டில் ஜனநாயகம் எங்ஙனம் உயிர்வாழும் என்பதுதான் மிகப் பெரிய கேள்வி.

ஆம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய விசேட உரிமை என்ற அந்தஸ்த்தைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் தீர்ப்பை, நீதிபதியை விமர்சிக்கின்ற மிக மோசமான செயலை பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர செய்துள்ளார்.

இங்கு குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பாராளுமன்றத்தில் வைத்து சரத் வீரசேகர விமர்சித்தமை தொடர்பில் இப்போது சிங்கள மக்கள் அமைதியாக இருக்கலாம்.

ஆம், சரத் வீரசேகர தமிழ் மக்களுக்கு எதிராகக் கதைத்துள்ளார் – சிங்கள மக்களுக்காக அவர் வாதிட்டுள்ளார் என்ற கோதாவில், சிங்கள மக்கள் அமைதியாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் கடைப்பிடிக்கின்ற அமைதியின் ஒவ்வொரு கணமும் இந்த நாட்டின் நீதித்துறைக்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படுகிறதென்பதுதான் உண்மை.

எனவே சரத் வீரசேகரவின் விடயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தவிர்க்கும்போது நீதிமன்றங்களையும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் விமர்சிக்கின்ற முறைமை மக்கள் சமூகத்தில் ஏற்பட்டுவிடும்.

ஆகவே அவ்வாறானதொரு பேராபத்து ஏற்படாமல் தடுத்தாக வேண்டும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதித்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு உரிய சட்டநடவடிக்கை எடுத்து அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வெறிதாக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தின் பேரில் அவர் கைது செய்யப்படுவது அவசியம்.

இதனை அரசாங்கமும் நீதிபரிபாலனமும் செய்தாக வேண்டும்.

அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிமன்றத்தை அவமதித்ததைக் கண்டித்து வட மாகாண சட்டத்தரணிகள் நேற்றைய தினம் (25) அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வட மாகாண சட்டத்தரணிகளின் இப்போராட்டத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் விடப்படுமாயின், நாடு முழுமையிலுமுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபட்டு, நீதிபரிபாலனத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

குற்றம் நிரூபிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை

# பதவி நீக்கம் செய்யும் வகையில் அரசியலமைப்பில் மாற்றம் வேண்டும்

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

என்றாலும் அவர்கள் குற்றவாளிகளாக தீர்மானிக்கப்பட்டாலும் அவர்களை நீக்குவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை. அதனால் குற்றம் நிரூபிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்க முடியுமான வகையில் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகளை பயன்படுத்திக்கொண்டு, வெளிநாட்டில் இருந்து சட்ட விரோதமான முறையில் தங்கம் கொண்டுவந்தமை தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த முன்வைத்த சிறப்புரிமை மீறல் தொடர்பான கோரிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு நீதிபதிகள் அழைக்கப்படுகின்றனர். அதேபோன்று தங்கம் கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினரும் இந்த குழுவுக்கு அழைக்கப்படுகிறார். இது நல்லவிடயமல்ல.

சிறப்புரிமை குழுவினால் அலிசப்ரி எம்.பிக்கு எதிராக அவர் குற்றம் செய்திருக்கிறார் என அறிக்கை ஒன்றை விடுத்தாலும் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதும் நான் தெரிவித்திருந்திருந்தேன்.

அதனால் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற பதவியில் இருந்து நீக்கும் சோல்பரி யாப்பில் இருக்கும் உறுப்புரிமையை, அரசியலமைப்பு திருத்தம் ஊடாக நடைமுறைக்கு கெண்டுவர வேண்டும் என்றார். (ம-7)

## பாதாள உலகத்தவர்களை முற்றாக ஒழிக்கும் விசேட நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பாதாள உலகத்தவர்களை முற்றாக ஒழிப்பதற்கு ஆறு மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மேல்மாகாணத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கொள்ளைகள், துப்பாக்கியை பயன்படுத்திய கொலைகள் பல மடங்காக அதிகரித்துள்ள நிலையில் பொலிஸார் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து திட்டமிட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுடன் இணைந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என தெரிவித்துள்ள தேசபந்து தென்னக்கோன் அடுத்த ஆறுமாதங்களில் பாதாளஉலக கும்பல்களை முற்றாக ஒழிக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும்தெரிவித்துள்ளார்.

இலங்கை கவலை தரும் விதத்தில் அதிகளவு துப்பாக்கிபிரயோகங்களை எதிர்கொண்டுள்ளதாலும் அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெறுவதாலும் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும்சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த வருடம் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் மன்னார் அடம்பனில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 46-53 வயதுடைய இருவரும் மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை இவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர்.

முன்னதாக போதைப் பொருள் மற்றும் பாதாள உலக குற்றங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசபந்து தென்னகோன் தலைமையில் பொலிஸ்மாஅதிபர் குழுவொன்றை நியமித்திருந்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

இந்தக் குழுவினர் பாதாள உலக குழுவினர். அவர்களின் சகாக்களின் விபரங்கள் குறித்த விபரங்களை திரட்டியுள்ளனர்.

சில குற்றவாளிகள் சிறைகளுக்குள் இருந்தவாறே தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் விசேட நடவடிக்கை அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ் பிரதேசத்தில்** கார்கில்ஸ் மானிப்பாய், கொமர்ஷல் வங்கி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய் பந்திங் சென்டர்- கலைவாணி விதி, கல்வியியல் கல்லூரி - கோப்பாய், கோண்டாவில் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவமுகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலைவாணி, திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதி சந்தி, இராஜ வீதி கோப்பாய், சம்பத் வங்கி - திருநெல்வேலி, வாமாஸ் வீதி சங்கானை, சங்கானை சந்தை, நிச்சாமம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கணேசபுரம் முத்துவிநாயகபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் வார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை - ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church பேசாலை, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம் தலைமன்னார். புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## குழு மோதல் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு, மட்டக்குளி பகுதியில் இரு குழுக்களுக்கிடையில்இடம்பெற்றமோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்குளி, ஜோர்ஜ் பீரிஸ் மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலின் போது மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக மட்டக்குளிபொலிஸார் தெரிவித்தனர்.

இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்ற நிலையில், வெட்டுக்காயங்களுடன் வீதியில் கிடந்த நபரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின் அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, காயமடைந்த மற்றுமொருவரான 28 வயதுடைய இளைஞர் சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இறந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### ஜேர்மனியில் மிகை பணவீக்கம் (hyperinflation) - 1923

முதலாம் உலகப் போர் முடிந்த பின் வெர்சேல்ஸ் உடன்படிக்கையின்படி ஜேர்மனி 33 மில்லியன் டொலர் பணத்தை பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வெற்றி பெற்ற நாடுகளுக்கு நஷ்டஈடாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது. ஜேர்மனி தனது முதல் இழப்பீட்டுத் தொகையை 1921 இல் செலுத்தியது. ஆனால் 1922 இல் செலுத்த முடியவில்லை.

இதனால் பிரான்சும் பெல்ஜியமும் ஜனவரி 1923 இல் ஜேர்மனியை ஆக்கிரமித்து பலாத்காரமாக பணம் பெற முடிவு செய்தன. அதன் பிரகாரம் நிலக்கரி போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்காக ஜேர்மனியின் முக்கிய தொழில் பகுதியான ரூர் மீது படையெடுத்தனர்.

ஜேர்மனியர்கள் செயலற்ற எதிர்ப்புடன் பதிலளித்தனர். அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் மற்றும் பிரெஞ்சு மற்றும் பெல்ஜியர்கள் விரும்பும் பொருட்களை தயாரிக்க மறுத்தனர். அவர்கள் தொழிற்சாலைகளை நாசப்படுத்தினர் மற்றும் சுரங்கங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தனர். இந் நடவடிக்கையால் பிரெஞ்சு மற்றும் பெல்ஜியர்கள் வன்முறையுடன் நடந்து கொண்டனர். சில ஜேர்மனியர்களை சுட்டுக் கொன்றனர் மற்றும் சிலரை வெளியேற்றினர்.

வெய்மர் அரசாங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக அதிக பணம் அச்சடித்து அவர்களுக்கு ஆதரவளித்தது. அதிக பணவீக்கத்தின் போது வெளியிடப்பட்ட நாணயம் பேப்பியர் மார்க் (Papiermark) ஆகும்.

பொருளாதாரத்தில் அதிகமான பண நோட்டுகள் விலை கட்டுப்பாட்டை மீறி சென்றன. நவம்பர் 1923 மிக மோசமான மாதமாக காணப்பட்டது. பாணின் விலை 201,000,000,000 ஜேர்மன் மார்க் ஆக இருந்தது. மக்கள் தங்கள் சம்பளத்தை தள்ளுவண்டிகளில் ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது. ஒரு நாளின் சம்பளம் அடுத்த நாள் ஒரு கப் காபியை வாங்கும் அளவுக்கு விலைகள் ஏறின. நடுத்தர வர்க்கத்தினரும், முதியவர்களும் தங்களுடைய சேமிப்பும் ஓய்வூதியமும் அழிந்ததால் பெரும் அவதிக்குள்ளாகினர். இது மிகை பணவீக்கம் (hyperinflation) என்று அழைக்கப்பட்டது.

இதன் விளைவாக, Reichsbank இல் வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைந்தது. பணவீக்கம் அதிகரித்ததால், குனோவின் (Cuno) அமைச்சரவை ஒகஸ்ட் 1923 இல் ராஜினாமா செய்தது. அது குஸ்டாவ் ஸ்ட்ரெஸ்மேன் (Gustav Stresemann) அமைச்சரவையால் மாற்றப்பட்டது. ஒக்டோபர் தொடக்கத்தில் ஸ்ட்ரெஸ்மேன் தனது அமைச்சரவையை மாற்றியமைத்த பிறகு, ஹான்ஸ் லூதர் நிதி அமைச்சரானார்.

நிதி அமைச்சர் ஆவதற்கு முன் லூதர் Reichsbank இல் பணிபுரிந்திருந்தார். அவர் Reichsbank உடனும் பொருளாதார நிபுணர்களுடன் சேர்ந்து பணவியல் சீர்திருத்தத்தின் கூறுகளை இணைத்து நாணயத்திற்கான ஒரு உறுதிப்படுத்தல் திட்டத்தை விரைவாகக் கொண்டு வந்தார். 13 ஒக்டோபர் 1923 இன் அவசரச் சட்டத்தின் உதவியுடன் நிதி மற்றும் பொருளாதார விடயங்களில் ஆணைகளை வெளியிடும் அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்கியது. அதே நாளில், 15 ஒக்டோபர் 1923 அன்று திட்டம் செயற்படுத்தப்பட்டது.

அதாவது நாணயத்தைத் திரும்பப் பெற அவர்களிடம் தங்கம் இருக்கவில்லை. புதிய நாணயம் விவசாயம் மற்றும் வணிகத்திற்காக பயன்படுத்தப்படும் நிலத்தால் ஆதரிக்கப்பட்டது. இவை 3.2 பில்லியன் கோல்ட்மார்க்ஸ் வரை அடமானமாக வைக்கப்பட்டது (Rente (ரெண்டே) என்பது ஜேர்மன் மொழியில் அடமானத்திற்கான தொழில்நுட்ப சொல்). ரெண்டன்மார்க் ஒரு டிரில்லியன் பழைய பேப்பியர்மார்க்ஸ் (Papiermark) சமமான ஒரு ரெண்டன்மார்க் என்ற விகிதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது, ஒரு அமெரிக்க டொலரின் மாற்று விகிதம் 4.2 ரெண்டன்மார்க்களுக்கு சமமாகக் கொண்டு வரப்பட்டது.



வெய்மர் குடியரசில் பணவீக்கம் 1923
மக்கள் வங்கியில் இருந்து பெரிய கூடைகளில் பணம் எடுத்துச் செய்தல்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 நவம்பரின் 61.0 சதவீதத் திலிருந்து 2022 டிசெம்பர் 57.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, 2022 இன் இரண்டாம் அரைப் பகுதியில் குறைந்தள வான வாசிப்பைப் பதிவு செய்தது. அதையொத்த போக்கினைத் தொடர்ந்து உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 நவம்பரின் 73.7 சதவீதத்திலிருந்து 2022 டிசெம்பரில் 64.4 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. அதேவேளை, உணவல்லாப் பண வீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2022 நவம்பரின் 54.5 சதவீதத்திலிருந்து 2022 டிசெம்பரில் 53.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த ஆறு மாத காலமாக பணவீக்கம் மேலும் வீழ்ச்சி அடைந்து சென்றது.

### இலங்கையின் தற்போதைய பணவீக்கம்

கடந்த மே மாதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 25.2 சதவீதமாகவும் உணவுப் பணவீக்கம் 21.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஏப்ரலில் பணவீக்கமானது 35.3 சதவீதமாகவும் உணவுப்பணவீக்கம் 30.6 சதவீதமாகவும் காணப்பட்ட நிலையிலேயே மே மாதத்தில் சாதகமான வீழ்ச்சி பதிவாகியுள்ளது. முதன்மைப் பணவீக்கத்தின் இவ்வீழ்ச்சியானது, பரந்தளவில் இலங்கை மத்திய வங்கியினால் 2023 ஏப்ரலில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க வீழ்ச்சிப் பாதைக்கு அமைவாகக் காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. உணவுப் பணவீக்கமானது ஏப்ரலில் 30.6 சதவீதத்திலிருந்து மே மாதத்தில் 21.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளை உணவல்லாப் பணவீக்கம் ஏப்பரலில் 37.6 சதவீதத்திலிருந்து 27 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜேர்மனியில் மிகை பணவீக்கம்
(hyperinflation)

| ஒரு அவுன்ஸ் தங்கம் வாங்குவதற்கு தேவையான ஜேர்மன் மார்க் 1919-1923 | |
|---|---|
| Jan 1919 | 170.00 |
| Sept 1919 | 499.00 |
| Jan 1920 | 1,340.00 |
| Sept 1920 | 1,201.00 |
| Jan 1921 | 1,349.00 |
| Sept 1921 | 2,175.00 |
| Jan 1922 | 3,976.00 |
| Sept 1922 | 30,381.00 |
| Jan 1923 | 372,477.00 |
| Sept 1923 | 269,439,000.00 |
| Oct 2, 1923 | 6,631,749,000.00 |
| Oct 9, 1923 | 24,868,950,000.00 |
| Oct 16, 1923 | 84,969,072,000.00 |
| Oct 23, 1923 | 1,160,552,882,000.00 |
| Oct 30, 1923 | 1,347,070,000,000.00 |
| Nov 5, 1923 | 8,700,000,000,000.00 |
| Nov 30, 1923 | 87,000,000,000,000.00 |

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஏப்ரலில் 27.8 சதவீதத்திலிருந்து மே மாதம் 20.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கமைய பணவீக்கத்தின் வீழ்ச்சிப் போக்கானது முன்கூட்டியே ஊகிக்கப்பட்டதை விட விரைவாக இவ்வாண்டின் 3 ஆம் காலாண்டில் ஒற்றை இலக்க மட்டங்களை நோக்கி பணவீக்கத்தினைத் தொடர்ந்தும் குறைவடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறுக்கமான நாணய மற்றும் இறை கொள்கைகளின் காலங்கடந்த தாக்கம், இலங்கை ரூபாய் வலுவடைதல், எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளில் குறைவு, உணவு விலைகள் இயல்பு நிலைக்குத் திரும்புதல் அத்துடன் சாதகமான புள்ளிவிபரத் தளத்தாக்கத்தின் விளைவு என்பன மூலம் பணவீக்கம் வீழ்ச்சிப் போக்கில் செல்வதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product அல்லது GDP)

ஒரு நிலப்பகுதியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product அல்லது GDP) என்பது அப்பகுதியின் பொருளாதாரத்தின் அளவை அறிய உதவும் அளவைகளுள் ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியுள் ஒரு நிலப்பகுதியின் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்தப் பொருட்களினதும் சேவைகளினதும் சந்தைப் பெறுமதியே மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் கூறப்படுகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பொருளாதார வளர்ச்சியை காலாண்டுக்கு காலாண்டோ அல்லது ஆண்டுக்கு ஆண்டோ ஒப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் பொருளாதாரக் கொள்கைகளின் வெற்றி/தோல்விகளை தீர்மானிக்கவும் பொருளாதார பின்னடைவை கண்காணிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பதன் ஆங்கிலச் சுருக்கமான ஜிடிபி (GDP) என்பதை பரவலாக தனிச் சொல்லாகவே பயன்படுத்துவோரும் உண்டு.

ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அளவிட உதவும் இச்சொல் ஒரு பகுதி (நாட்டின் ஒரு பகுதி அல்லது மாவட்டம்) அல்லது ஓர் தொழிற்றுறையை அளவிடவும் பயன்படுத்தப்படுகின்றது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்மட்டம்...

மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் நீர்மின் உற்பத்தி திறன் தேசியத் தேவையில் 15 சதவீதமாக குறைந்துள்ளது.

இலங்கை மின்சார சபை தேவையில் 65 சதவீதத்திற்கு அனல் மின்சாரத்தையே சார்ந்துள்ளது, இதன் விளைவாக உற்பத்தி செலவு ரூ.800 மில்லியனில் இருந்து ரூ.1,200 மில்லியனாக உயர்ந்துள்ளது.

“கடந்த ஆண்டின் இதே காலத்தில், போதுமான அளவு மழை பெய்துள்ளது. நீர்த்தேக்கங்கள் நிரம்பின. சில சமயங்களில், 70 சதவீத தேவைக்கு நீர்மின்சாரம் பயன்படுத்தப்பட்டது. இன்று, 15 சதவீதமாக மின் உற்பத்தி குறைந்துள்ளது. (ம-7)

## கண் தொடர்பான...

படுத்தக் கூடியளவு வெப்பம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், அங்கு வாழும் மக்கள் வெப்பம் தொடர்பில் அவதானமாக செயற்படுவதுடன், அதிகளவு நீரை பருகுமாறும் நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடும் வெப்பம், வறட்சி நிலவுவதால் கண் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு சுகாதார பிரிவு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

வெப்பமான வானிலை காரணமாக கண் தொடர்பான நோய்கள் ஏற்படக் கூடும் என தேசிய கண் வைத்திய சாலையின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வறட்சியான கால நிலையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,82,000 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7)

## தெங்கு பூச்சி...

ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.

வறட்சியான வானிலையால் தென்னை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும் என தெங்கு ஆராய்ச்சி நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## வட மாகாணத்...

தூதரகத்தின் முதல் நிலைச் செயலாளர் ஒலிவர் பிரஸ் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய வந்த அவர், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் வட மாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் வடமாகாணத்தில் தற்போது தாம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் குறித்து சுவிஸ் தூதரகத்தின் பிரதித் தலைவருக்கு ஆளுநர் விளக்கியிருந்தார். (ம-7,104)

## கஜேந்திர...

பதற்றநிலை தோன்றியதோடு இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதைப்போன்று, சிங்களவர்கள் வட, கிழக்கில் சுதந்திரமாக வாழவேண்டும். சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் தொடக்கமாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக இவ்வாரம் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இப்போராட்டத்தில் அனைத்து சிங்கள பௌத்தர்களும், இனவாதக் கொள்கையற்ற தமிழர்களும் கலந்து கொள்ளவேண்டும்" என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில சில தினங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று வெள்ளிக்கிழமை கஜேந்திரகுமாரின் கொழும்பு இல்லம் முன்பாகப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதனையடுத்து கொள்ளுப்பிட்டி, குயின்ஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு முன்பாக நேற்றுக் காலையிலேயே பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் நீர்த்தாரை வாகனமும் நிறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அங்கு வருகைதரவில்லை. மாறாக நேற்றுக் காலை 10.30 மணியளவில் அங்கு வருகைதந்த பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தலைமையிலான 4 - 5 பேர் அடங்கிய குழுவினர், எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர்.

கஜேந்திரகுமார் எம்.பியின் இல்ல நுழைவாயில் மூடப்பட்டிருந்த நிலையில், சுமார் ஒருமணி நேரம் வரையில் கோஷங்களை எழுப்பிய அக்குழுவினர் பின்னர் இல்ல நுழைவாயிலை நோக்கி நகர முற்பட்டனர்.

இருப்பினும், அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் சீலரத்ன தேரர் தலைமையிலான குழுவினரை முன்னேறவிடாமல் தடுத்தனர்.

அதனை எதிர்த்துக் குரலெழுப்பிய சீலரத்ன தேரர், "கஜேந்திரகுமாரை வரச் சொல்லுங்கள். நீங்கள் கஜேந்திரகுமாருக்குப் பயப்படுகிறீர்களா? நீங்கள் அனைவரும் கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரனைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள். ரணிலும் பயப்படுகிறார். மகிந்தவும் பயப்படுகிறார். கோட்டாபயவும் அதனால் தான் வெளியேறினார்.

தற்போது வட, கிழக்கு மாகாணங்கள் இவர்களுக்கு வேண்டிய விதத்தில் இயங்குகின்றன. நாங்கள் இப்போது செல்கின்றோம். ஆனால் மீண்டும் வருவோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று பொலிஸாரைப் பார்த்து உரத்த தொனியில் கூறியதுடன் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (ம-7)

## 250...

வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெற்கொள்வனவு சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

இதற்காக 39 களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நெற்கொள்வனவை ஆரம்பிப்பதற்காக இதற்கு முன்னர் 250 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்த தொகை மூலமான கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

இந்த நிதியினூடாக 27 இலட்சம் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டதாக நெற்கொள்வனவு சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வடக்கு மாகாண...

கத்தை பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகத்திற்கும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பிரதிப் பிரதம செயலாளராக இருந்த குகநாதனை உள்ளூராட்சி அமைச்சுக்கும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 25/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1565
S 23 45 58 63 78
46478

தன நிதானய
திகதி - 2023.08.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1247
O 15 17 54 76 O
Double Chance 25332

லக்கி 7
திகதி 25.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0043
L7 இலக்கம் 0 1
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 0 5 5 7 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3459
சீட்டிழுப்பு திகதி 25.08.2023
H 46 51 55 69
H 04593
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 526
விருச்சிகம் 08 19 24 62 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 5217
G 2 6 8 5 8 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2191
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.25
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 15 41 68 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,058,524.40
63656 746
DLB

சனிதா
திகதி 2023.08.25 வெற்றி வாரம் 4352 வர்ணம் செம்மஞ்சள்
08 38 61 74 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,389,736.00
15293 310
DLB

சசிரி
வெற்றி வாரம் 367
2023.08.25
பச்சை
வெற்றி இலக்கங்கள் 11 20 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,302,680/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3903
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.25
தினம் வெள்ளிக்கிழமை
13 23 36 59 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,041,932/-
68187 745
DLB

ஜய
திகதி 2023.08.25 வெற்றி வாரம் 1367 வர்ணம் ஊதா
H 10 11 39 49 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 432,338,094.20
52528 671
DLB தொலைபேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,102,256/-
2023.08.25
05 11 32 69 G
62170 819
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

வல்வெட்டித்துறையில் இயங்கும்
Village Hotel Indian Restaurant ற்கு
☞ House Keeper
☞ Waiter (உணவு பரிமாறுநர்)
அனுபவமுள்ள வேலையாட்கள்
தேவை (16838)

**076 830 3931**

**கட்டட வேலைகள்**

உங்கள் வீட்டினை
தரமாகவும்
விரைவாகவும்
கட்டித்தரப்படும் (16836)

**074 077 1490**

**வேலையாட்கள் தேவை**

- Marketing Staff
- Photoshop/Video editing Staff
- Camera Operator
- Receptionist

Send CV to Whatsapp 071 040 4773 (16845)

**Betta Consultant**

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**


# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி



வாகையடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி (குணம்) அவர்கள் 23.08.2023 புதன்கிழமை உசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும் கார்த்திகேசு (சிவபாதம் - ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன் (லண்டன்), யசீதரன் (லண்டன்), தயாளதரன் (லண்டன்), அகல்யா (ஆசிரியை - யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), அனுஸா (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (லண்டன்), கந்தவேள் (இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் பத்மநாதன் (ஆசிரியர்), இராசரத்தினம் (நவாலி), அமரர் தனபாக்கியவதி (தனம்ரீச்சர் மட்டுவில்), அமரர் பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவசுப்பிரமணியம், சிவகுரு, அமரர் சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோபிதாவின் (மருத்துவர் - லண்டன்) பெரிய தாயாரும் கௌசிகன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), அபினாஸ் (லண்டன்), கேசிகா, மிபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில். (16843)

தகவல் : குடும்பத்தினர்
077 631 4178

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1988 . 10 . 13

மறைவு 2022 . 09 . 05

யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணி இடைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் ஆனந்தராசா அருண்குமார்

அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி

இடைக்குறிச்சி,
வரணி. (16785)

தகவல்:
குடும்பத்தினர்


## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது. (16830)

மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk
+44 796 374 3585 (Whatsapp)
021 222 7141 (Sri Lankan no)

## காணிகள் விற்பனைக்குண்டு

1. ஆனைக்கோட்டை புளியங்கண்டு வீதியில், 2 பரப்பு சிறிய வீட்டுடன்
2. சுதுமலை மாப்பியன் மில் ஒழுங்கை, 2 1/2 பரப்பு வெறுங் காணி 10 அடி அகலப்பாதை முகப்புடன்
3. தாவடி தெற்கில்,9 பரப்பு விஸ்தீரணமுடைய காணி
4. யாழ்ப்பாணம் கொட்டடியில் சிறைச்சாலை வீதி முகப்புடன், ஐந்து கடைகளுடன் 3 பரப்பு ஆதனம்
5. மானிப்பாய் மேற்கு தெணி வயல் நிலம் 10 பரப்பு ஆகியன விற்பனைக்கு உண்டு

குறிப்பு: தரகர்களும் வரவேற்கப்படுகின்றனர் (16825)

D.தனா T.P / Whatsapp / Viber } **077 677 9348**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16842)

தொடர்புகளுக்கு:- குரு
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 245/= | (max2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 185/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg அரிசி மா | - 179/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 160/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 400 g Anlene | - 1250/= | ~~(1350/=)~~ |
| 300 g Family Pro | - 810/= | ~~(850/=)~~ |
| 1 Kg Sunlight rose powder | - 360/= | ~~(430/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 1 Kg றவை | - 288/= | |

1050/-




~~1080/-~~

(16846)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org